# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2049 ● மே 15, 2018 Weekly E-paper ● May 15, 2018





## கர்நாடகத் தேர்தல்

# கூடுதல் வாக்கு குறைந்த வெற்றி

● சுப.வீரபாண்டியன்

**15.05.2018 மதியம் 2 மணி நிலவரப்படி**

கர்நாடகத் தேர்தலில் பாஜக 105 இடங்களிலும், காங்கிரஸ் 78 இடங்களிலும், மதச் சார்பற்ற ஜனதா தளம் 38 இடங்களிலும் முன்னிலை வகிக்கின்றன. இந்நிலவரப்படி, யாருக்கும் தனிப் பெரும்பான்மை இல்லை. எனினும் இந்நிலை மாறலாம். எப்படி இருந்தாலும், பெரிய வெற்றி யார் ஒருவருக்கும் கிடைக்கப் போவதில்லை. பெரும்பாலும் கூட்டணி ஆட்சி வருவதற்கே வாய்ப்புகள் இருப்பதாகத் தெரிகின்றன.

தொடக்கத்தில் 118 இடங்கள் வரையில் முன்னணியில் இருந்த பாஜக மெதுவாகக் கீழே இறங்கியது. இப்போது ஆட்சிக்கு யார் வரப்போகின்றனர் என்பதனை மஜக முடிவு செய்யும் என்பதாகத் தெரிகிறது.

இதில் கவலை தரத்தக்க செய்திகள் பல உள்ளன.

தாங்கள் இந்துக்கள் இல்லை, தனி மதம் என்று சொல்லிப் போராடிய லிங்காயத்துகளின் கோரிக்கையை ஏற்று அதனைத் தனி மதம் என்று அறிவித்தது காங்கிரஸ் ஆட்சி. ஆனால் இப்போது அந்தப் பகுதிகளில், பெரும்பான்மையான இடங்களில் பாஜக வெற்றி பெற்றுள்ளது. லிங்காயத் அல்லாத பிற இந்துக்களின் வாக்குகளைப் பெறுவதில் பாஜக வெற்றி பெற்றுள்ளது என்றே கருத வேண்டியுள்ளது.

ரெட்டி சகோதரர்களின் ஊழல் உலகறிந்த ஒன்று. அதேபோல எடியூரப்பா, ஊழல் குற்றச்சாற்றில் சிறைக்குச் சென்றவர். பாஜக கட்சியிலிருந்தும் விலக்கப்பட்டவர். ஊழல் கறை படியாத உத்தமர்கள் என்று தங்களை சொல்லிக் கொள்ளும் பாஜக, ரெட்டி சகோதரர்களையும், எடியூரப்பாவையும் தங்கள் வேட்பாளர்களாக அறிவித்ததுடன் எடியூரப்பாதான் முதலமைச்சர் வேட்பாளர் என்றும் அறிவித்தது. அவர்கள் அனைவருமே வெற்றி பெற்றுள்ளனர். மக்களின் ஊழல் எதிர்ப்பு உணர்வு என்பது தேர்தலுக்கு அப்பாற்பட்டதா?

கூட்டாட்சிக்குத் தேர்தல் முடிவுகள் வழிவிடுமானால், அது குதிரை பேரங்களுக்கும், பல்வேறு குழப்பங்களுக்குமே வாசல் திறக்கும். அதிலும் மஜக தலைவர் குமாரசாமி பற்றிக் கேட்கவே வேண்டாம். அவரோடு சேர்ந்து கூட்டணி ஆட்சி அமைக்க காங்கிரஸ் முயன்றால், அது எதிர்காலத்தில் மேலும் ஒரு சரிவிற்கே காங்கிரஸைக் கொண்டு செல்லும்.

இன்னொரு விந்தையையும் இத்தேர்தல் முடிவில் பார்க்க முடிகிறது. மதியம் இரண்டு மணி நிலவரப்படி, காங்கிரஸ் 37.9 % வாக்குகளையும், பாஜக 36.5% வாக்குகளையும் பெற்றுள்ளன. ஆனால் பாஜக 104 இடங்களில் முன்னிலை பெற, காங்கிரஸ் கட்சியோ 78 இடங்களில் மட்டுமே முன்னிலை வகிக்கின்றது. கூடுதல் வாக்குகளும், குறைந்த வெற்றியும் என்பது, நம் தேர்தல் முறை எவ்வளவு தவறானது என்பதை எடுத்துக் காட்டுகிறது.

மொத்தத்தில், கர்நாடகத் தேர்தலில் எல்லோரும் தோற்றுப் போயுள்ளனர் மக்கள் உள்பட! ●



# பெரியாரின் பிள்ளைகள் நாம்!






12.05.2018 மாலை, அம்பேத்கர்-பெரியார் படிப்பு வட்டம் சார்பில், லண்டன், ஈஸ்ட் ஹாம் பகுதில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்துகொண்டு, “அரசியல் அறம்” என்னும் தலைப்பில் தோழர் சுபவீ ஒன்றே கால் மணி நேரம் உரையாற்றினார். தமிழகத்துத் தமிழர்களும், ஈழத் தமிழர்களும் சேர்ந்து பார்வையாளர்களாகக் கலந்து கொண்ட கூட்டமாக அது இருந்தது.

வினா-விடை நேரத்தில், வீரத்தமிழர் முன்னணி (நாம் தமிழர் அமைப்பின் வெளிநாட்டுப் பிரிவு) நண்பர்கள் சிலர் எழுந்து, சுபவீயையும், திராவிடத்தையும் கடுமையாகத் தாக்கிப் பேசினர். எதிர்க்கருத்தை அங்கு அவர்கள் முழுமையாகப் பேச அனுமதிக்கப்பட்டனர். “திமுக வை ஆதரிக்கும் சுபவீக்கு, அறம் பற்றிப் பேச என்ன தகுதி உள்ளது?” “திராவிடத்தால் நாம் வீழ்ந்தோமே தவிர, எங்கே எழுந்தோம்?” என்பன போன்ற வினாக்களையும், “வைகோ ஒரு தெலுங்கர்” என்பது போன்ற தம் கருத்தினையும் மிக ஆவேசமாக (அவர்களின் தலைவர் சீமானைப் போலவே) வெளியிட்டனர். திராவிடக் கழகங்கள் இல்லாத தமிழகம் வேண்டும் என்றனர். (பாஜகவும் அதைத்தான் சொல்கிறது!)

அனைத்தையும் பொறுமையாகக் கேட்டுக்கொண்ட சுபவீ, இடையில் சினம் கொண்டு சிலர் அவர்களை எதிர்க்கத் தொடங்கியபோது சமாதானம் செய்து உட்கார வைத்துவிட்டு, அவர்களின் வினாக்கள் அனைத்திற்கும் விடை சொன்னார்.

அனைவரும் பொறுமையாகக் கேட்டுக் கைகயொலி எழுப்பினர். இறுதியில் அந்த நண்பர்களும் தோழர் சுபவீயைச் சந்தித்து, நட்பு பாராட்டி விடைபெற்றனர்.

எதிர்க்கருத்துகளுக்கு நம் அரங்கிலே இடம் தந்தோம்! ஆம், பெரியாரின் பிள்ளைகள் நாம்!!

**- ஹரிஷ், லண்டன்**

# அதே ரஜினி! அதே வசனம்!

● **உதயகுமார்**

காலா திரைப்படத்தின் பாடல் வெளியீட்டு விழா, தமிழர் உரிமைப் பிரச்சினையில் நடிகர் ரஜினிகாந்த் நிலைப்பாட்டை நமக்குத் தெளிவாக மீண்டும் ஒருமுறை அறிவித்திருக்கிறது.

தமிழ்நாட்டில் பல்வேறு பிரச்சனைகளும் மக்கள் போராட்டங்களும் நிலவும் இச்சூழலில், அவைபற்றி எதுவுமே வாய்திறக்காமல் தன்னுடைய படம் வெற்றி அடைய வேண்டும் என்பதை மட்டுமே மனதில் நிறுத்தித் தன்னுடைய பேச்சை நிறைவு செய்திருக்கிறார் “பத்ம விபூஷன் ஸ்ரீரஜினிகாந்த்” அவர்கள்.

போகிறபோக்கில் ‘லிங்கா’ திரைப்படத்தைப் பற்றிப் பேசும் போது தென்னிந்திய நதிகளை இணைப்பதே தன்னுடைய வாழ்நாள் கனவு என்றும் அப்படி நதிகளை இணைத்த அடுத்த நாளே தான் மறைந்தாலும் கவலையில்லை என்றும் சொல்லியிருக்கிறார். தன்னுடைய பேச்சின் நிறைவுப் பகுதியில் “matter” விசயத்திற்கு வருகிறேன் என்று சொல்லிவிட்டு வழக்கம்போல் “நான் என்ன செய்வது? இன்னும் அதற்கான நாள் வரவில்லை. அப்படி ஒருநாள் வரும்போது தமிழகத்திற்கு நல்ல நேரம் பிறக்கும்” என்று குறிசொல்லி தன்னுடைய பேச்சை முடித்திருக்கிறார்.

தென்னிந்திய நதிகளை இணைப்பதே இலக்கு



என்றால் அதற்கான திட்டங்கள், செயல்கள் ஏதேனும் ரஜினிகாந்திடம் உண்டா? தான் அரசியலுக்கு வருவதற்கே இன்னும் நேரம் வரவில்லை என்று சொல்லிவிட்டு நதிகளை இணைக்கப் போவதாகச் சொல்வது எவ்வளவு பெரிய முரண்?

நடக்காத விசயங்களைப் பற்றிப்பேசியே மக்களை ஏமாற்றுவது வாடிக்கையாகிவிட்டது. ‘நதிகளை மீட்போம்’, ‘நல்லநாள் வரப்போகிறது’ போன்ற சொற்றொடர்களைக் கேட்டு மக்கள் சலிப்படைந்து இன்று போராட்டக்களத்தில் இறங்கியிருக்கிறார்கள். மத்திய அரசு காவிரி மேலாண்மை அமைக்காமல் தமிழகத்தை வஞ்சித்து வருவதை எதிர்த்து தமிழ்நாடே கொந்தளிப்பில் இருக்கிறது. “சூப்பர் ஸ்டாரு யாருன்னு கேட்டா சின்னக் குழந்தையும் சொல்லும்” என்கிற ரஜினிகாந்த் திரைப்பாடல் வரிகளைப் போல தமிழ்நாட்டின் இன்றைய தேவை எதுவென்று கேட்டால் காவிரி மேலாண்மை வாரியம் என்று சின்னக் குழந்தையும் சொல்லும். ஆனால் “மீசை வைத்த குழந்தை” மட்டும் அது தெரிந்தும் அதனைச் சொல்ல மறுக்கிறது. திரைப்படம் இந்தியாவிலும் மற்ற நாடுகளிலும் வெளியாகி வெற்றிகரமாக ஓட வேண்டும், விளம்பரங்கள் மூலம் வரும் வருவாய் இவையெல்லாம் கண் முன்வந்து போகத்தானே செய்யும்.

கொள்கைகளைக் கேட்டால் தலைதான் சுற்றும், உங்களை “வாழ வைத்த தெய்வங்களான” தமிழர் உரிமைகளுக்காகவாது குரல் கொடுத்திருக்கலாம்.

காவிரியைக் காண நாங்கள் நீதி கேட்டு வீதிகளில் போராடிக் கொண்டிருக்கும் வேளையில் ஒரு சிலரால் மட்டும் தான் கங்கையின் அழகைப் போற்றி வருணிக்க முடியும்.

●

# வீடுதேடிவரும் ஆபத்து!




● உதயகுமார்

*நெதர்லாந்தில் உருவாக்கப்பட்டுப் பல்வேறு விவாதங்களுக்கும் சர்ச்சைகளுக்கும் உள்ளான "Big Brother" என்னும் தொலைக்காட்சி நிகழ்ச்சியை "Big Boss" என்று பெயரை மாற்றி இங்கு விற்பனை செய்வதோடு மட்டுமல்லாமல், ஒருபொழுது போக்கு நிகழ்ச்சியின் எல்லைகளைத் தாண்டி மக்களை மடைமாற்றும் அளவிற்கு அந்நிகழ்ச்சியை மக்களின் அன்றாட வாழ்க்கைக்குள் புகுத்தியிருக்கிறார்கள். கடந்த ஆண்டு 'Big Boss' உண்டாக்கிய சர்ச்சைகளை எல்லோரும் அறிவோம். அந்நிகழ்ச்சியைத் தடை செய்யக் கோரியும் பல வழக்குகள் தொடரப்பட்டன. ஆயினும் "Big Boss 2" இன் 'promo' என்று சொல்லக் கூடிய முன்னறிவிப்பை நடிகர் கமலஹாசன் தனது ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்டார். காலா திரைப்படப் பாடல்கள் மூன்று நாட்களுக்கு முன் பிரம்மாண்டமாக வெளியிடப்பட்டது. சமூக வலைத்தளங்களில் அதிகமாகப் பார்க்கப்பட்டது. இப்போது "Big Boss 2" இன் 'promo' அதிகமாகப் பார்க்கப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு நடிகர்களும் போட்டி போட்டுக்கொண்டு மக்களிடம் தாங்களே பேசு பொருளாக இருக்க வேண்டும் என்று விழைவதை நாம் விளங்கிக் கொள்ள முடிகிறது.*

*இப்போது IPL நடந்து கொண்டிருக்கிறது. இப்போட்டிகள் முடிவடைந்தவுடன் Big Boss தொடங்கும். மக்களைச் சிந்திக்கவிடாமல் அவர்கள் நேரத்தில் முதலீடு செய்து பெரு முதலாளிகள் இலாபமடைகின்றனர்.*

*இந்த Big Boss என்னும் நிகழ்ச்சி மற்ற நிகழ்ச்சிகளிடமிருந்து சற்றே வேறுபட்டது. உளவியல் ரீதியாக அதில் பங்கேற்போரையும் அந்நிகழ்ச்சியைப் பார்க்கும் மக்களையும் பாதிக்கக்கூடியது. இந்த உளவியல் பிரச்சனைகளைப் பற்றிய விவாதங்கள் நெதர்லாந்திலேயே நடந்திருக்கிறது. மேலும் சமுதாயச் சீர்கேட்டையும் ஏற்படுத்தியிருக்கிறது. "Ovia Army" என்ற அவலத்தையும் தமிழ்நாடு சந்தித்தது.*

*இந்த ஆண்டு என்னென்ன கூத்துகளைத் தமிழ்நாடு சந்திக்கப் போகிறது என்று தெரியவில்லை. "Big Boss" நிகழ்ச்சியின் சர்ச்சைகளே இனி விவாதப் பொருளாகும். Save Tamilnadu, Save Farmers போன்ற பிரச்சாரங்கள் மாறி "Save Bharani, Save Ovia" போன்ற பிரச்சாரங்கள் சமூக ஊடங்களில் முன்னெடுக்கப்படும்.*

*இவைபோக அந்நிகழ்ச்சியின் தொகுப்பாளர் வேறு ஏதாவது புரியாதவற்றை சம்பந்தமில்லாமல் பேசுவார். பொதுக் கூட்டங்களில் பேசிப்பேசி, ஊர் ஊராகச் சென்று தெருத்தெருவாக மக்களைச் சந்தித்துக் கொள்கைகளைப் பரப்பித் தலைவர்கள் அரசியலுக்கு வந்தார்கள். ஆனால் ஒருபொழுது போக்கு நிகழ்ச்சி மூலம் அரசியலுக்கு அஸ்திவாரம் போட்டவர் கமலஹாசன்தான். இப்போது அரசியலில் மய்யத்தில் இருப்பதாகச் சொல்கிறார். இந்த மய்யம் இன்னும் எப்படியெல்லாம் மக்களை மயக்கப் போகிறதோ?*

*இன்னும் இந்நிகழ்ச்சிக்குப் பின்னால் நிறைய அரசியல் இருப்பதாகச் செய்திகள் வருகின்றன. தமிழ்நாட்டு மக்கள் "Big Boss" என்னும் புரட்டைப் புறக்கணிக்க வேண்டும்.*

*தமிழர்களே, மாலை நேரத்தில் புத்தகங்களோடு உட்காருங்கள்!*

*தொலைக் காட்சி ஓரத்தில் உட்காராதீர்கள்!!*

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

## இவர் என்ன டி.ஜி.பி.யா?

**பெ**ண்களைப் போகப் பொருளாகவும், அடிமைப் பொருளாகவும் வேதம் ஓதி வைத்திருக்கிறது மனுஷ்மிருதி.

இந்த வழியில் அடிபிறழாமல் நடப்பவர்தான் முன்னாள் நடிகர் எஸ்.வி.சேகர் என்பதை அவரது பேச்சும் செயலும் காட்டுகிறது.

பெண்கள் உயர் பதவியில் இருப்பதும், பதவி உயர்வு பெறுவதும் பாலியல் அடிப்படையில் என்று வெளிப்படையாகப் பேசிய சேகர் ஊடகவியலாளர்களைக் குறிவைத்தார்.

ஊடகக்காரர்கள் கொதித்தனர், வழக்குத் தொடுத்தனர். சேகர் குற்றவாளி என்றது உயர்நீதிமன்றம். முன்பிணை கேட்டார் சேகர். மறுத்தது நீதிமன்றம். ஆனாலும் அவரைக் கைது செய்யாமல் நடமாவிட்டுக் கொண்டிருக்கிறது காவல்துறை.

தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த நீதிபதி கர்ணனைக் கைது செய்ய நீதிமன்றம் ஆணையிட்ட போது, தனிப்படை அமைத்து வடமாநிலங்களிலும், தென்னகத்திலும் தேடித்தேடிக் கைது செய்தனர். (அவருடைய அண்ணியும் தலைமைச் செயலாளராக இருந்திருந்தால் கைது செய்திருப்பார்களா என்று தெரியவில்லை)

ஆனால் எஸ்.வி.சேகர் அப்படியா? அவரின் செல்வாக்குதான் என்ன? கண்முன் வந்து நின்றாலும் 'அவாளைக்' கைது செய்ய மாட்டார்கள் காவல்துறையினர், முடியாது அவர்களால்.

அண்மையில் மத்திய அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன் கலந்து கொண்ட நிகழ்ச்சியில் எஸ்.வி.சேகரும் அமைச்சரும் கலந்து கொண்டு சிரித்தார்கள், பேசினார்கள் புகைப்படத்துடன் செய்தி வெளியானது.

கொதித்துவிட்டார் பொன்.ராதாகிருஷ்ணன். நான் என்ன டி.ஜி.பி.யா? சேகரை பிடித்துக் கொடுப்பதுதான் என் வேலையா என்று சொன்ன அவர். சேகரைச் சந்தித்ததை மட்டும் மறுக்க வில்லை.

ஒரு குற்றவாளியைக் கண்டால், பிடித்துக் கொடுப்பது நாட்டின் சாதாரணக் குடிமகனுடைய கடமை என்று காவல்துறை சொல்லும் நிலையில் -

ஒரு மத்திய அமைச்சர், நீதிமன்றத்தால் குற்றவாளி என்று சொல்லப்பட்ட எஸ்.வி.சேகரைக் காவல்துறையிடம் பிடித்துக் கொடுக்காமல் 'நான் என்ன டி.ஜி.பி.யா?' என்று பேசும் நிலையில், அது எத்தகைய பின் விளைவை ஏற்படுத்தும் என்பது அமைச்சருக்குத் தெரியாதா.

பொன்.ராதாகிஷ்ணனின் இந்த அணுகுமுறையும் பேச்சும் பிற பாலியல் குற்றவாளிக்கும் பொருந்துமா?

தமிழகத்தில் நேர்மையான காவல்துறை உயர் அதிகாரிகள் இருக்கிறார்கள் என்பது உண்மைதான்.

இருந்தும் என்ன பயன்?

அவர்களால் குற்றவாளி எஸ்.வி.சேகரை நெருங்கக் கூட முடியவில்லை.

இதற்குப் பெயர்தான் 'ஜனநாயகம்!'

ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

ஆசிரியர் குழு
**தமிழ்மறவன்**
**உதயகுமார்**
**வெற்றிச்செல்வன்**

வெளியிடுபவர்
**கோ.தினகரன்**

இணையதளம்
**www.keetru.com**
**www.peravai.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
**122/130 என்.டி. ராமராவ் தெரு**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை - 600 024**

**தொலைபேசி: 044-4204 7162**


# ஐ.ஏ.எஸ். தேர்வும், தொடரும் அநீதியும்...

● ச.பாலா

ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். உள்ளிட்ட உயர் பொறுப்புகளுக்கு மத்திய குடிமைப் பணிகள் தேர்வாணையத்தால் நடத்தப்படும் குடிமைப் பணித் தேர்வு முடிவுகள் அண்மையில் வெளியாகின. சாதாரணமாக ஆயிரம் பேர் தேர்வு செய்யப்பட்டால் அதில் தமிழகத்தைச் சேர்ந்த நூற்றுக்கும் அதிகமான மாணவ, மாணவிகள் வெற்றி பெறுவார்கள். ஆனால் கடந்த இரண்டு ஆண்டுகளாகத் தமிழ்நாட்டிலிருந்து தேர்ச்சி பெறுபவர்களின் எண்ணிக்கை பெருமளவு குறைந்து வருகிறது. குறிப்பாக இந்த ஆண்டு இந்திய அளவில் தேர்வு செய்யப்பட்ட 990 பேரில் வெறும் 42 பேர் மட்டுமே தமிழ்நாட்டிலிருந்து தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள்.

தற்போது மத்திய குடிமைப் பணிகள் தேர்வாணையம் மதிப்பெண் பட்டியலை வெளியிட்டுள்ளது. அதனைப் பார்க்கும் போது சில செய்திகள் புலப்படுகின்றன. அதாவது பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் முதன்மைத் தேர்வில் (Main examination) நல்ல மதிப்பெண் பெற்றிருந்தும் நேர்முகத் தேர்வில் குறைவான மதிப்பெண்களே பெற்றிருக்கிறார்கள். அதாவது சராசரியாக உயர் வகுப்பு (Forward class) மாணவர்கள் நேர்முகத் தேர்வில் 275க்கு 160/180 மதிப்பெண்கள் வரை பெற்றுள்ளனர். அதே வேளையில் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்களில் பெரும்பாலானோர் 140 என்கிற அளவிலேயே மதிப்பெண் பெற்றுள்ளனர். ஐஏஎஸ் தேர்வைப் பொறுத்தவரை ஒவ்வொரு மதிப்பெண்ணும் மிக முக்கியம். ஒரு மதிப்பெண்ணால் தேர்வில் தோல்வி அடைந்தவர்கள், ஐஏஎஸ் போன்ற உயர் பொறுப்பு கிடைக்காதவர்கள், தங்களது சொந்த மாநிலத்தில் பணியாற்ற வாய்ப்பை இழந்தவர்கள் ஏராளமானோர் இருக்கின்றனர். நமது மாணவர்களின் வெற்றியைப் பாதித்ததில் நேர்முகத் தேர்வு மதிப்பெண் ஒரு முக்கியப் பங்கு வகிக்கிறது. இப்படி மதிப்பெண் குறையக் காரணம் இருக்கிறது. யு.பி.எஸ்.சி. எனப்படும் மத்தியக் குடிமைப் பணிகள் தேர்வாணையத்தில் தற்போது மொத்தம் 8 உறுப்பினர்கள் உள்ளனர், தலைவரையும் சேர்த்து.

இந்த உறுப்பினர்களைத் தலைமையாகக் கொண்டுதான் நேர்முகத் தேர்வுக்கான ஒவ்வொரு அமர்வும் (Board, Panel) உருவாக்கப்படுகிறது. இவர்களுடன் சேர்ந்து பிற துறைசார் வல்லுநர்கள் அமர்வில் இருப்பார்கள். மாணவர்களுக்கான மதிப்பெண்களைத் தீர்மானிப்பவர் அந்த போர்டின் தலைவர். இங்கே தான் பிரச்சனையே. அதாவது இந்த நேர்முகத் தேர்வில் அமரும் மத்தியத் தேர்வாணைய உறுப்பினர்கள் பெரும்பாலும், சில சமயங்களில் அனைவரும் உயர் சாதியைச் சேர்ந்தவர்களே. தற்போது இருப்பவர்களில் சேர்மனைத் தவிர பெரும்பாலும் உயர் வகுப்பினர் தான். மேலும், இவர்களிடத்தில் நேர்முகத் தேர்வுக்கு வரும் மாணவ, மாணவிகள் எந்தெந்தப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்ற முழு விவரமும் இருக்கும். அதாவது அந்த மாணவன் அல்லது மாணவி தாழ்த்தப்பட்டவரா, பழங்குடியினரா, பிற்படுத்தப்பட்ட வகுப்பினரா என்ற முழு விவரமும் தெரியும். அப்படி இருக்கும் போது ஏற்கனவே இட ஒதுக்கீட்டுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் நபர்கள் இது போன்ற இடங்களில் மதிப்பெண் வழங்கும் பொறுப்பில் இருந்தால் அவர்களது செயல்பாடுகள் நியாயமானதாக இருக்கும் என்று சொல்லமுடியாது. ஏனென்றால், உதாரணமாக தற்போது ஆர்எஸ்எஸ் பின்புலம் கொண்ட பா.ஜ.க. மூத்த தலைவர் முரளி மனோகர் ஜோஷி அவர்களின் உறவினர் மத்திய தேர்வாணைய உறுப்பினராக இருக்கிறார். அவர் தாழ்த்தப்பட்ட, பழங்குடி


M. KARUNANIDHI
President, D.M.K.,

30.06.2012.

Dear ...,

The Union Public Service Commission (UPSC) has been conducting the Civil Services Examination, since the Constitution came into force, to select candidates for the All India Services such as IAS and IPS and other central services. The Civil Services Examination has three stages—prelims, mains and personality test. Questions of this examination are framed in English and Hindi. The candidates from Tamil Nadu have been answering the English version of the question paper. Whereas candidates from Hindi speaking states get the additional benefit of facing the questions in their mother tongue. Even in these circumstances students from Tamilnadu have performed creditably over the years.

In 2011, the constitutional body has introduced a significant change in the examination patters and the Civil Services Aptitude Test (CSAT) came into being. A chunk of the questions in the new format of the examination are framed in such a way that only candidates who are well versed in English will be able to answer the questions within the stipulated time of two hours. Such questions in English are extremely difficult to comprehend under stressful examination conditions. However, such questions are also found translated in Hindi. So candidates w... easily by rea... end up scor... they are not... challenge fo... services exa... understandin... to violate Art... is a Fundam...




வகுப்பு மாணவர்களுக்கு எப்படி நியாயமான மதிப்பெண் வழங்குவார் என்று நம்பமுடியும்.

மத்திய தேர்வாணையத்தின் செயல்பாட்டையும், தமிழர்களுக்கு இழைக்கப்படும் அநீதி தொடர்பாகவும் சற்றுப் பின்னோக்கிப் பார்க்கலாம். 1964ஆம் ஆண்டு லால்பகதூர் சாஸ்திரி பிரதமரான பின்பு ஐ.ஏ.எஸ் தேர்வுகளை இந்தியில் நடத்தவேண்டும் என்ற யோசனையைத் தெரிவித்தார். இந்த யோசனைக்குத் தமிழகத்தில் கடுமையான எதிர்ப்பு கிளம்பியது. பேரறிஞர் அண்ணா தலைமையில் தமிழகம் முழுவதும் போராட்டம் நடைபெற்றது. தமிழ்மொழியைக் காக்க பலர் தங்கள் இன்னுயிரை ஈந்தனர். இந்தப் போராட்டங்களை அடுத்து ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ் தேர்வுகள் இந்தியிலும், ஆங்கிலத்திலும் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. தமிழகத்தில் நடைபெற்ற தொடர் போராட்டங்களைக் கருத்தில் கொண்டு 1965ஆம் ஆண்டு பிப்ரவரி 25 அன்று காங்கிரஸ் காரியக் கமிட்டி அன்றைய காங்கிரஸ் தலைவர் காமராஜர் தலைமையில் ஒரு ஆலோசனைக் கூட்டத்தை டில்லியில் நடத்தியது. அந்தக் கூட்டத்தில் ‘இந்திய குடிமைப் பணிக்கான தேர்வுகள் ஆங்கிலம், இந்தி தவிர அனைத்து பிராந்திய மொழிகளிலும் நடத்தப்படவேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மத்திய குடிமைப் பணிகள் தேர்வாணையம் நடத்தும் தேர்வுகள் ஆங்கிலம், இந்தி தவிர மற்ற எல்லா பிராந்திய மொழிகளிலும் நடத்தினால்தான் இந்தி பேசாத மக்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிக்கு ஒரு முடிவு கட்டமுடியும் என்று காமராஜர் வலியுறுத்தினார். அதேநேரத்தில் தமிழகத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் தொடர் போராட்டங்கள் நடைபெற்றன. இந்தப் போராட்டங்களைக் கருத்தில்கொண்டு 1967ஆம் ஆண்டு அன்றைய பிரதமர் இந்திராகாந்தி தலைமையில் நாடாளுமன்றத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அத்தீர்மானத்தில் ஆங்கிலம், இந்தி தவிர எட்டாவது அட்டவணையில் உள்ள அனைத்து மொழிகளிலும் இந்திய குடிமைப் பணிக்கான தேர்வு நடத்தப்படவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இத்தீர்மானம் தொடர்பாக எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. இதனையடுத்து 1974ஆம் ஆண்டு குடிமைப்பணித் தேர்வு தொடர்பாகப் பரிந்துரைகள் வழங்க டி.எஸ்.கோத்தாரி அவர்கள் தலைமையில் ஒரு குழுவை மத்திய அரசு அமைத்தது. 1978ஆம் ஆண்டு கோத்தாரி கமிட்டி பரிந்துரைகளை ஏற்ற மத்திய அரசு, 1979ஆம் ஆண்டு குடிமைப்பணித் தேர்வில் மாற்றம் கொண்டுவந்தது. அதன்படி முதல்நிலைத் தேர்வு, முதன்மைத் தேர்வு மற்றும் ஆளுமை சோதனை என்று சொல்லக்கூடிய நேர்முகத் தேர்வு என்று மூன்று கட்டங்களாக தேர்வுகள் நடத்தப்பட்டன. கோத்தாரி கமிட்டி அறிக்கையில் உள்ள முக்கியமான பரிந்துரைகள் என்னவென்றால் குடிமைப் பணித் தேர்வுகளை ஆங்கிலம், இந்தி தவிர எட்டாவது அட்டவணையில் உள்ள அனைத்து மொழிகளிலும் எழுதலாம் என்பதாகும். இதனையடுத்து 1979ஆம் ஆண்டு முதல் தற்போது வரை தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் தேர்வை தமிழில் எழுதி வருகின்றனர். இதில் குறிப்பிட வேண்டிய முக்கியமான விஷயம் என்னவென்றால் தமிழில் தேர்வு எழுதிய இந்த 40 ஆண்டுகளில் கேள்விகள் ஆங்கிலம் மற்றும் இந்தியில் தான் கேட்கப்படுகின்றன.

மத்திய தேர்வாணையம் நடத்தும் தேர்வுமுறை இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தின் விதி 14 (தேர்வு முறையில் மொழிவாரி சமத்துவம் இல்லை) விதி 16க்கு (கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் அனைவருக்கும் சம உரிமை) விரோதமான நடவடிக்கையாகும்.

ஒருவர் தனது கருத்தை அந்த விஷயத்தை பற்றிய சரியான புரிதல் இருந்தால் தான் சரியான கருத்தை வெளியிட முடியும். அதே போல் கேள்வி என்னவென்று புரிந்தால் தான் பதிலைச் (கருத்தை) சிறப்பாகவும் தெளிவாகவும் வெளியிட முடியும். எனவே ஐ.ஏ.எஸ் தேர்வுகளில் கேள்விகள் ஆங்கிலம் மற்றும் இந்தியில் மட்டும் கேட்டால் போதாது. கேள்விகள் தமிழ் உட்பட எட்டாவது அட்டவணையில் உள்ள அனைத்து மொழிகளிலும் கேட்கப்பட வேண்டும். அப்போதுதான் தேர்வு முறையில் ஒரு சமத்துவம் உண்டாகும்.

அதேபோல் தற்போதைய பின்னடைவைச் சீர் செய்ய மத்திய தேர்வாணைய உறுப்பினர்களை நியமிக்கும் மத்திய அரசு உயர் வகுப்பினரை மட்டும் நியமனம் செய்வதைத் தவிர்த்து தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, பழங்குடி வகுப்பைச் சேர்ந்தவர்களையும் தேர்வாணைய உறுப்பினர்களாக நியமிக்க வேண்டும். அப்போது தான் மாணவர்களுக்கு இடையேயான பாகுபாடுகளைக் களைய முடியும்.

தேர்வு வினாத்தாளில், மொழிச் சமத்துவத்தைக் கடைபிடிப்பதை வலியுறுத்தி, 2012ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அப்போதைய பிரதமர் மன்மோகன் சிங் அவர்களுக்குக் கடிதம் எழுதினார். குடிமைப் பணித் தேர்வுகளைத் தமிழிலும் நடத்த வலியுறுத்தி 2014ஆம் ஆண்டு சென்னையில் மாணவர்களால் பேரணி ஒன்றும் நடத்தப்பட்டது.

மத்திய தேர்வாணைய விசயங்களில் இது போன்ற சீர்திருத்தத்தை மத்திய அரசு மேற்கொள்ளவில்லை என்றால் ஐ.ஏ.எஸ். தேர்வில் தமிழகத்தைச் சேர்ந்த மாணவ, மாணவிகளுக்கான அநீதிகள் தொடரத்தான் செய்யும். ●

Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secratary, Dravida Iyyakka Tamilar Peravai.